ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாதா$_2$ர்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா$_3$ந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸதா$_3$ ஹ்ரு'தி$_3$ ॥

நம்மாழ்வார் அருளிச்செய்த

# ॥ ஏழையர் ஆவி ॥

*This document[*] has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

[*]This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ ஏழையர் ஆவி ॥

எம்பெருமானது பேரழகை உருவெளித் தோற்றத்தில் கண்டு தலைவி வருந்தி உரைத்தல்

‡ஏழையர் ஆவியுண்ணும்⋆ இணைக் கூற்றங்கொலோ அறியேன்⋆
ஆழியம் கண்ண பிரான்⋆ திருக்கண்கள்கொலோ அறியேன்⋆
சூழவும் தாமரை நாண்மலர் போல்⋆ வந்து தோன்றும் கண்டீர்⋆
தோழியர்காள்! அன்னைமீர்!⋆ என் செய்கேன் துயராட்டியேனே (1)

ஆட்டியும் தூற்றியும் நின்று⋆ அன்னைமீர் என்னை நீர் நலிந்தென்⋆
மாட்டுயர் கற்பகத்தின்⋆ வல்லியோ கொழுந்தோ அறியேன்⋆
ஈட்டிய வெண்ணெய் உண்டான்⋆ திருமூக்கென-தாவியுள்ளே⋆
மாட்டிய வல் விளக்கின்⋆ சுடராய் நிற்கும் வாலியதே (2)

வாலியதோர் கனிகொல்⋆ வினையாட்டியேன் வல்வினைகொல்⋆
கோலம் திரள் பவளக்⋆ கொழும் துண்டங்கொலோ அறியேன்⋆
நீல நெடு முகில் போல்⋆ திருமேனி அம்மான் தொண்டைவாய்⋆
ஏலும் திசையுள் எல்லாம்⋆ வந்து தோன்றும் என் இன்னுயிர்க்கே (3)

இன்னுயிர்க்கேழையர் மேல்⋆ வளையும் இணை நீல விற்கொல்⋆
மன்னிய சீர் மதனன்⋆ கருப்புச் சிலைகொல்⋆ மதனன்
தன்னுயிர்த் தாதை⋆ கண்ண பெருமான் புருவம் அவையே⋆
என்னுயிர் மேலனவாய்⋆ அடுகின்றன என்று நின்றே (4)

என்று நின்றே திகழும்⋆ செய்ய ஈன் சுடர் வெண் மின்னுக்கொல்⋆
அன்றி என்னாவியடும்⋆ அணி முத்தங்கொலோ அறியேன்⋆
குன்றம் எடுத்த பிரான் முறுவல்⋆ எனதாவியடும்⋆
ஒன்றும் அறிகின்றிலேன்⋆ அன்னைமீர்! எனக்குய்விடமே (5)

உய்விடம் ஏழையர்க்கும்⋆ அசுரர்க்கும் அரக்கர்கட்கும்⋆
எவ்விடம் என்றிலங்கி⋆ மகரம் தழைக்கும் தளிர்கொல்⋆

www.prapatti.com

பை விடப் பாம்பணையான்⋆ திருக் குண்டலக் காதுகளே⋆
    கைவிடல் ஒன்றும் இன்றி⋆ அடுகின்றன காண்மின்களே (6)

காண்மின்கள் அன்னையர்காள்⋆ ! என்று காட்டும் வகையறியேன்⋆
    நாள்மன்னு வெண் திங்கள்கொல்!⋆ நயந்தார்கட்கு நச்சிலைகொல்⋆
சேண் மன்னு நால் தடம் தோள்⋆ பெருமான் தன் திரு நுதலே⋆
    கோள் மன்னி ஆவியடும்⋆ கொடியேன் உயிர் கோள் இழைத்தே (7)

கோள் இழைத் தாமரையும்⋆ கொடியும் பவளமும் வில்லும்⋆
    கோள் இழைத் தண் முத்தமும்⋆ தளிரும் குளிர் வான் பிறையும்⋆
கோள் இழையாவுடைய⋆ கொழும் சோதி வட்டங்கொல்⋆ கண்ணன்
    கோளிழை வாள் முகமாய்க்⋆ கொடியேன் உயிர் கொள்கின்றதே (8)

கொள்கின்ற கோள் இருளைச்⋆ சுகிர்ந்திட்ட கொழும் சுருளின்⋆
    உள்கொண்ட நீல நன்னூல் தழைகொல்⋆ அன்று மாயன் குழல்⋆
விள்கின்ற பூந்தண்டுழாய்⋆ விரை நாற வந்தென் உயிரை⋆
    கள்கின்றவாறறியீர்⋆ அன்னைமீர்! கழறா நிற்றிரே (9)

நிற்றி முற்றத்துள் என்று⋆ நெரித்த கையராய்⋆ என்னை நீர்
    சுற்றியும் சூழ்ந்தும் வைதிர்⋆ சுடர்ச் சோதி மணி நிறமாய்⋆
முற்ற இம்மூவுலகும்⋆ விரிகின்ற சுடர் முடிக்கே⋆
    ஒற்றுமைக் கொண்டதுள்ளம்⋆ அன்னைமீர்! நசையென்
        நுங்கட்கே (10)

‡கட்கரிய பிரமன் சிவன்⋆ இந்திரன் என்றிவர்க்கும்⋆
    கட்கரிய கண்ணனைக்⋆ குருகூர்ச் சடகோபன் சொன்ன⋆
உட்குடை ஆயிரத்துள்⋆ இவையும் ஒரு பத்தும் வல்லார்⋆
    உட்குடை வானவரோடு⋆ உடனாய் என்றும் மாயாரே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com